# யூன் – 09 - வெள்ளி

**புனித சிரியா எபரேம்**

**“ஆண்டவர் ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலைநாட்டுகின்றார்“ - தி.பா 146 : 7**

## முதல் வாசகம் : தோபித்து 11 : 5 – 17

அக்காலத்தில் அன்னா தம் மகன் வழியைப் பார்த்தவண்ணம் அமர்ந்திருந்தார். மகன் வருவதைக் கண்டு தம் கணவரிடம், ”உம் மகன் வருகிறான் அவனுடன் சென்றவரும் வருகிறார்” என்றார். தோபியா தம் தந்தையை அணுகுமுன் இரபேல் அவரிடம், ”உன் தந்தை பார்வை பெறுவது உறுதி. அவருடைய கண்களில் மீனின் பித்தப்பையைத் தேய்த்துவிடும். அது அவருடைய கண்களில் உள்ள வெண்புள்ளிகள் சுருங்கி உரிந்து விழச் செய்யும். உம் தந்தை பார்வை பெற்று ஒளியைக் காண்பார்” என்றார். அன்னா ஓடி வந்து தம் மகனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, ”மகனே, உன்னைப் பார்த்துவிட்டேன். இனி நான் இறக்கலாம்” என்று கூறி மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தார். தோபித்து எழுந்து, தடுமாறியவாறு முற்றத்தின் கதவு வழியாக வெளியே வந்தார். தோபியா அவரிடம் சென்றார். அவரது கையில் மீனின் பித்தப்பை இருந்தது. தம் தந்தையைத் தாங்கியவாறு அவருடைய கண்களில் ஊதி, ”கலங்காதீர்கள், அப்பா” என்றார். பிறகு கண்களில் மருந்திட்டு, தம் இரு கைகளாலும் அவருடைய கண்களின் ஓரத்திலிருந்து படலத்தை உரித்தெடுத்தார். தோபித்து தம் மகனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தவாறே, ”என் மகனே, என் கண்ணின் ஒளியை, உன்னைப் பார்த்துவிட்டேன்” என்றார். ”கடவுள் போற்றி. அவரது மாபெரும் பெயர் போற்றி! அவருடைய தூய வானதூதர் அனைவரும் போற்றி! அவரது மாபெரும் பெயர் நம்மைப் பாதுகாப்பதாக! எல்லா வானதூதரும் என்றென்றும் போற்றி! கடவுள் என்னைத் தண்டித்தார். இப்போதோ என் மகன் தோபியாவை நான் காண்கிறேன்” என்று கடவுளைப் போற்றினார். தோபியா அக்களிப்புடன் கடவுளை வாயாரப் புகழ்ந்துகொண்டே வீட்டிற்குள் நுழைந்தார் தம் பயணத்தை வெற்றியாக முடித்துவிட்டதாகவும், பணத்தைத் திரும்பப் பெற்றுவிட்டதாகவும், இரகுவேலின் மகள் சாராவை மணம் புரிந்துகொண்டதாகவும், அவள் நினிவேயின் வாயில் அருகில் வந்து கொண்டிருப்பதாகவும் தம் தந்தையிடம் கூறினார். தோபித்து அக்களிப்புடன் ஆண்டவரைப் புகழ்ந்துகொண்டே தம் மருமகளைச் சந்திக்க நினிவேயின் வாயிலுக்குச் சென்றார். நினிவே மக்கள் அவர் செல்வதையும், யாருடைய உதவியுமின்றித் திடமாக நடப்பதையும் கண்டு வியந்தார்கள். தம் கண்களைத் திறந்ததன் வழியாகக் கடவுள் தம்மீது எத்துணை இரக்கம் காட்டியுள்ளார் என்று தோபித்து அவர்கள் முன் அறிக்கையிட்டார். தம் மகன் தோபியாவின் மனைவி சாராவைச் சந்தித்து வாழ்த்தினார். ”மருமகளே, உன்னை எங்களிடம் கொண்டுவந்து சேர்த்த உன் கடவுள் போற்றி! மருமகளே, உன் தந்தை வாழ்க! என் மகன் தோபியாவுக்கு என் வாழ்த்துகள். உனக்கும் என் வாழத்துகள். மருமகளே, உன் வீட்டிற்குள் வா. நலம், பேறு, மகிழ்ச்சி ஆகிய அனைத்தும் உன்னோடு வருக!” என்று வரவேற்றார்.

**பதில்பாடல் :** என் நெஞ்சே நீ ஆண்டவரைப் போற்றிடு

## நற்செய்தி : மாற்கு 12 : 35 – 37

அக்காலத்தில், இயேசு கோவிலில் கற்பித்துக் கொண்டிருக்கும்போது, ”மெசியா தாவீதின் மகன் என்று மறைநூல் அறிஞர் கூறுவது எப்படி? தூய ஆவியின் தூண்டுதலால், ”ஆண்டவர் என் தலைவரிடம், ”நான் உம் பகைவரை உமக்கு அடிபணியவைக்கும்வரை நீர் என் வலப்பக்கம் வீற்றிரும்” என்று உரைத்தார்” எனத் தாவீதே கூறியுள்ளார் அல்லவா! தாவீது அவரைத் தலைவர் எனக் குறிப்பிடுவதால் அவர் அவருக்கு மகனாக இருப்பது எப்படி?” என்று கேட்டார். அப்போது பெருந்திரளான மக்கள் இயேசு கூறியவற்றை மனமுவந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

**தியானம்:** இன்றைய நற்செய்திப் பகுதியை நாம் புரிந்து கொள்வதாயின், அதற்கு முந்தின பகுதியையும் பிந்திய பகுதிக்கான வாசகங்களையும் நன்கு படிக்க வேண்டிய அவசிய நிலை உருவாகுகின்றது. தமது போதனையைக் கேட்பவர்கள் அவற்றைப் புரிந்துகொள்கின்றனரா என இறைமகன் இயேசு தனது காலத்திலேயே மக்களை சோதித்து அறிபவராக இருந்திருக்கின்றார் என இன்றைய நற்செய்திக்கமைவாக எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் நாம் கேட்கும் இறை வார்த்தை இலகுவான அர்த்தமுடையதாகவும் இருக்கலாம், அல்லது அது கடினமான அர்த்தமுடையதாகவும் இருக்கலாம் எனினும், நாம் கேட்கும் ஒவ்வொரு இறை வார்த்தையையும் நாம் மிகுந்த கவனமுடன் “மனமுவந்து” செவிமடுக்க வேண்டுமென இன்றைய நற்செய்தி எமக்கு அறிவுறுத்துகின்றது. இறைமகன் இயேசுவின் இறைவார்த்தை எமது வாழ்விற்கு அத்தியாவசியமானது என்பது மறுக்கமுடியாத உண்மை. இன்றைய நற்செய்தி போன்று அதன் பொருளை எம்மால் புரிந்துகொள்வது கடினமான காரியம். எனினும் நமது வாழ்வின் நெறிகளை சீர்தூக்கிப்பார்த்து அவற்றை சீர்செய்யவும் இறைவார்த்தை எமக்குத் துணைசெய்கின்றது. ஏனெனில் இறை வார்த்தையானது எமது புரியமுடியாத அறிவிற்கு அப்பால் சென்று எம்மை வாழவைக்கின்றது. எனவே இறைவார்த்தையை செவிமடுத்துக் கேட்கும் வரத்தை எமக்கு அருளுமாறு இறைமகன் இயேசுவிடம் இரந்து கேட்போம். ஆதியிலே நீரின்மீது அசைவாடிக் கொண்டிருந்தவர் இன்றும் எமது மத்தியில் வாழுகின்றார் என நம்பி விசுவசிப்போம். ஆதியும் அந்தமுமில்லாதவர் தமது வல்லமையுள்ள வார்த்தையால் இவ்வுலகை மட்டுமல்ல, மாறாக எம்மையும் அவரது சாயலாகப் படைத்துள்ளார். அவர் திருப்பாதம் எம்மை முற்றுமுழுதாக ஒப்படைப்போம். இறைவார்த்தை அனைத்தையும் செய்து முடிக்கும் என நம்புவோம்.